# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு ஜீன் மாதம் (24.06.2021) 24 – ஆம் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>24.06.2021</td><td>
பொருள் – 1
இந்நகராட்சி பொது சுகாதார இலகுரக வாகனம் TN45CZ0344, TN45CZ0358, TN45CZ0327, TN45CZ0310 மற்றும் லாரி TDY 1660-க்கு காப்பீடு காலம் முடிவடைய உள்ளதால் யுனெடெட் இந்தியா இன்சூரன்ஸ் லிட் நிறுவனத்தில் காப்பீடு புதுப்பிக்க கட்டண விபரம்
<table>
<tr><th>வ.எண்.</th><th>வண்டி எண்.</th><th>காப்பீடு தொகை</th></tr>
<tr><td>1</td><td>TN45CZ0344 (LCV)</td><td>20161/-</td></tr>
<tr><td>2</td><td>TN45CZ0358 (LCV)</td><td>20161/-</td></tr>
<tr><td>3</td><td>TN45CZ0327 (LCV)</td><td>20161/-</td></tr>
<tr><td>4</td><td>TN45CZ0310 (LCV)</td><td>20161/-</td></tr>
<tr><td>5</td><td>TDY 1660 (டிப்பர்)</td><td>20161/-</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>119972/-</td></tr>
</table>
எனவே மேற்கண்டவாறு லாரி வாகன காப்பீடு தொகை யுனெடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு ரூ.119972/- செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு</u>
1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
(ந.க.எண்.1683/2020/எச்2)
</td><td>தீர்மான எண்.951 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

24.06.2021

**பொருள் – 2**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வருகிற ஏப்ரல் 6 ஆம் தேதி நடைபெற உள்ளதால் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் அடிப்படை வசதிகளான சாய்வு தளம், மின் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற அனைத்து வசதிகளையும் செய்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்தில் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு-15-ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டதில் திரு.ஆர்.ரெத்தினபாண்டியன் ஒப்பந்தக்காரர் மணப்பாறை அவர்களின் குறைந்த விலைபுள்ளியை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குறைவான விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதற்கு ஆன செலவினத்தொகை ரூ.244945/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கண்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது,

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.587/2021/இ1)

**தீர்மான எண்.952**
**பதிவு செய்யப்பட்டது**

24.06.2021

**பொருள் – 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு பணிக்காக கிருமிநாசினி மற்றும் பொருட்கள் வாங்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிக ள் வரப்பெற்றன . அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

விபரம் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,05,000/-

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை வித்தியாசம் |
|---|---|---|
| 1 | சரம் என்விரோ சர்வீஸ் (பி) லிட் | + 1.42% |
| 2 | தாமரை என்டர்பிரைசஸ், திருச்சி | - 0.18% |

மேற்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தாமரை எண்டர்பிரைசஸ், திருச்சி நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1003/2020/எச்2.

**தீர்மான எண்.953**
**அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| 24.06.2021 | **பொருள் – 4**<br>மணப்பாறை நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் இட்லி தயார் செய்ய பயன்படுத்தி வரப்பட்ட பாய்லர் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும் பொது மக்களுக்கு தினந்தோறும் குறைந்த விலையில் உணவு வழங்குவது தமிழக அரசின் மிகவும் முக்கியமான திட்டம் என்பதாலும் அம்மா உணவகத்திற்கு தேவையான மிகவும் அத்தியாவசமான சமையல் செய்ய பயன்படக் கூடிய பாய்லர் பழுதினை சரி செய்வதற்கான பணியினை மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் பணி மேற்கொண்டதற்கு தொகை ரூ.33950/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து SRI BRAMHA KITCHEN SERVICESS, திருச்சி அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.2748/2020/இ1) | **தீர்மான எண்.954**<br>**பதிவு செய்யப்பட்டது** |
| 24.06.2021 | **பொருள் – 5**<br>மணப்பாறை நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள மின் வயர்களில் இருந்து திடீரென குறைந்தழுத்த மின்சாரம் வந்ததால் மின் இணைப்பிற்கான வயர்கள் முழுவதுமாக பழுதாகிவிட்டது. எனவே பழுதான மின் வயர்கள் முழுவதையும் புதிதாக மாற்றி அமைத்து அலுவலக பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதன் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டதில் M/S BR TRADERS மணப்பாறை அவர்களின் குறைந்த விலைபுள்ளியை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் படி விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதற்கு செலவினத்தொகை ரூ.19,465/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.1379/2021/இ1) | **தீர்மான எண்.955**<br>**பதிவு செய்யப்பட்டது** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**